**ERODE DISTRICT CO-OPERATIVE MILK PRODUCERS'UNION LTD.**
VASAVI COLLEGE POST- 638316, ERODE, TAMILNADU
PHONE: 8883600125,200; FAX: 0424-2534150
**email: eroaavin.mkt@gmail.com; GSTIN:33AAAAE0560A1ZO**

Ref.No.003/Mkg/Metro&Milk Distribution Route Tender/2022-24 Date: 25.04.2022

To

The Public Relation Officer
TCMPF Ltd.,
3-A Pasumpon Muthuramalinganar Salai,
Nandanam,Chennai – 600 035.

Sir

Sub: EDCMPU Ltd – Erode – Marketing Section – Operation of Milk Distribution Route – Engagement of Seven Lorries and Butter despatch to Metro Dairies Tender for the period 2022- 24 – Publishing of Tender Notification Advertisement as per TNTT Act and Rules – Requested– Reg.

--

We herewith enclose Tender Notification in Tamil and English Version for engagement Milk distribution vehicle for a period of two year. We request to publish in

One English Daily (All Editions in Tamilnadu)

One Tamil Daily (All Editions in Tamilnadu)

State Tender Bulletin

In accordance with the TNTT Act and Rules to publish in News paperson or before 30.04.2022. The maximum size of Tender Advertisement shall be 50 sq.cm.The approximate value of the tender is Rs. 100.00 Lakhs. Kindly arrange to send the copies of the advertisement and State tender Bulletin at the earliest.

Erode Dist Co-operative Milk
Producers' Union Ltd.,
Sd/- M.Balasubramaniam
General Manager

for General Manager

Encl:Advertisement Copy

ஈரோடுமாவட்டக் கூட்டுறவுபால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.
வாசவிகல்லூரி அஞ்சல்,ஈரோடு 638 316
email : eroaavin.mkt@gmail.com

## ஒப்பந்தப்புள்ளிஅறிவிப்பு

ஈரோடுமாவட்டத்தில்உள்ளஆவின் முகவர்களுக்குஏழு பால் விநியோகவழித்தடங்களில் லாரிகள் / வேன்கள் மூலம் 2022-24-ம் ஆண்டுக்குபால் மற்றும் பால்பொருட்கள் விநியோகம் செய்தல் குளிரூட்டபட்ட வாகனத்தை கொண்டு சென்னை இணைய பால் பண்ணைகளுக்கு வெண்ணெய் / நெய் கொண்டு சேர்த்தல் பணிக்கு ஒப்பந்தம் வழங்கும் தேதி முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இரு உறை (Two Part Cover System) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01 | ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பப்படிவம் பெறுவற்கான கடைசி நாள் / நேரம் | 30.05.2022மாலை 4.00 மணிவரை |
| 02 | மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் / நேரம் | 31.05.2022 காலை 11.00 மணிவரை |
| 03 | பெறப்பட்டஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் இடம். | ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட். வாசவிகல்லூரி அஞ்சல்,ஈரோடு-638316 |
| | **ஒப்பந்தப்புள்ளிமுன் விளக்க கூட்டம்** | **19.05.2022 காலை 11.00 மணி** |
| | பகுதி 1 தொழில் நுட்பஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள்/நேரம் | 31.05.2022 முற்பகல் 11.30 மணி |
| | பகுதி 2 வணிகநுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் | 31.05.2022 பிற்பகல் 3.030 மணி |
| 04 | 1.தேவைப்படும் பால் விநியோக வாகனங்கள்.<br><br>2.சென்னை இணைய அலுவலகங்களுக்கு வெண்ணெய் கொண்டு சேர்த்தல் பணி | 07லாரிகள் /பால் விநியோகவேன்கள்<br>5-7 மெ.டன் கொள்ளளவு : 03 வாகனங்கள்<br>3.0 – 3.5 மெ.டன. கொள்ளளவு : 03வாகனங்கள்<br>1.25– 2.0 மெ.டன. கொள்ளளவு : 01 வாகனம்<br><br>குளிரூட்டபட்ட 15.0– 20.0மெ.டன் கொள்ளளவு கொண்ட வாகனம் (தேவைக்கேற்ப) / லாரி |
| 05 | ஒப்பந்த காலம் | ஒப்பந்தம் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் |
| 05 | ஒவ்வொருவழித்தட பணிக்கும் தனித்தனியே ஒப்பந்தப்புள்ளி படிவம் ரூ.6,000/- (5% வரிகள் தனி) ரொக்கம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிபடிவம் மற்றும் அதன் தொடர்பான அனைத்து விபரங்களையும் www.tenders.tn.gov.inஎன்ற இணையதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தம் தொடர்பான விரிவான விபரங்களை ஒப்பந்த படிவத்தில் காணலாம். | |
| 06 | எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் முழுமையாகவோ, பகுதியாகவோ ஏற்கவோ, மறுக்கவோ, மாற்றி அமைக்கவோ அல்லது நிராகரிக்கவோ பொதுமேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. | |

இடம் : ஈரோடு
நாள் : 25.04.2022

பொதுமேலாளருக்காக

| | |
|---|---|
| | **ERODE DISTRICT CO-OPERATIVE MILK PRODUCERS' UNION LTD.**<br>VASAVI COLLEGE POST- 638316, ERODE, TAMILNADU<br>PHONE: 8883600125,160; FAX: 0424-2534150<br>**email: eroaavin.mkt@gmail.com; GSTIN:33AAAAE0560A1ZO** |

**Tender Notice for Seven Milk Distribution Route Lorries, Lifting Butter/Ghee from Erode DCMPU to Chennai Metro Dairies.**

Sealed Tenders are invited in two part system (Technical Bid & Commercial Bid) from the owners of Hire lorry for Milk & Milk products distribution from Dairy to aavin agents in Erode district and Butter/Ghee Despatch to Chennai Metro Dairy and from the date of order to Two year.

| | | |
|---|---|---|
| 01 | Last Date for sale of Tender Form | 30 .05.2022up to 4.00 PM |
| 02 | Last Date and time for receipt of filled inTender Form | 31.05.2022 up to 11.00 AM. |
| 03 | Place, Date & Time of Opening | Erode District Co-operativeMilk Producers' Union Limited,<br>Vasavi College Post,<br>Erode 638 316. |
| | **Tender Pre-Bid meeting** | **19.05.2022 at 11.00 AM** |
| | Part I Technical Bid | 31.05.2022 at 11.30 AM |
| | Part II Commercial Bid | 31.05.2022 at 3.00 PM |
| 04 | Total Number of Lorries.<br><br>Truck Requirement<br><br>Tender Period | 07 Lorries<br>5.0 -7.0 MT : 03 puffed vehicles<br>3.0-3.5 MT : 03puffed vehicles<br>1.25 – 2.0 MT : 01 puffed vehicle<br>Refrigerated Vehicle Capacity 15.0 to 20.0 MTs (For Butter Transportation) (as and when required)<br>2 Year from award of contracts |
| 05 | Cost of Tender Form: Rs.6,000/- (5% GST Extra). Separate Tender form should be submitted for each Milk Distribution Route and Products dispatch to Chennai. Tender form with terms and conditions can be downloaded at free of cost from Website: www.tenders.tn.gov.in . All related details will be available in the website. | |
| 06 | The decision of the General Manager, EDCMPU Ltd., Erode shall be final, conclusive and binding in all the matters relating to this Tender. | |

Place: Erode
Date: 25.04.22

General Manager

**ஈரோடு மாவட்டக் கூட்டுறவுபால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.**
**வாசவிகல்லூரி அஞ்சல்,ஈரோடு 638 316**
email :eroaavin.mkt@gmail.com

**இணைப்பு– 1**

| | | |
|---|---|---|
| 01 | ஓப்பந்தப்புள்ளிகோரும் அலுவலா் பெயர், பதவி, முகவரி | திரு.M.பாலசுப்ரமணியம்<br>மாவட்டவருவாய் அலுவலா்/பொதுமேலாளா<br>ஈரோடுமாவட்ட கூட்டுறவுபால்<br>உற்பத்தியாளா்கள் ஒன்றியம் லிமிடெட்<br>வாசவிகல்லூரி அஞ்சல்,ஈரோடு 638316 |
| 02 | பணியின் பெயா் | ஈரோடுமாவட்டத்தில் உள்ள ஆவின் முகவா்களுக்கு ஏழு லாரிகள் மூலம் பால் மற்றும் பால் பொருட்கள் கொண்டு செல்லுதல் குளிரூட்டபட்ட வாகனத்தை கொண்டு சென்னை இணையபால் பண்ணைகளுக்கு வெண்ணெய் கொண்டு சேர்த்தல் . |
| அ | ஒப்பந்த காலம் | ஒப்பந்தம் வழங்கும் தேதிமுதல் இரண்டு ஆண்டுகள் வரை. |
| ஆ | பணிநடைபெறும் மாவட்டத்தின் பெயா் | ஈரோடுமாவட்டம் மற்றும் சென்னை |
| | **ஓப்பந்தப்புள்ளி முன் விளக்க கூட்ட நாள்** | **19.05.2022 காலை 11.00 மணி** |
| 03 | எந்த இடத்தில் எந்த தேதிவரை என்ன விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான படிவம் கிடைக்கும் என்ற விபரம் | இவ்வொன்றிய<br>அலுவலகம் : **30.05.2022** மாலை 4.00 மணிவரை<br>ஒப்பந்தப்புள்ளிபடிவத்தின் விலை: ரூ.6000/-+வரிகள்<br>தனி“www.tenders.tn.gov.in”என்ற<br>இணையதளத்திலிருந்து இலவசமாக<br>படியிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 04 | செலுத்தப்படவேண்டிய<br>முன் வைப்புத் தொகைவிபரம்<br><br>ஒப்பந்தகாலம்: | ரூ. 5,000/- ம் பால் விநியோகவழித்தடபணி,<br><br>ரூ.50,000/- ம் சென்னைக்கு வெண்ணெய் கொண்டுசெல்லுதல்<br><br>இரண்டு ஆண்டுகள் |
| 05 | பூா்த்திசெய்யப்பட்டஒப்பந்தப் புள்ளிகள் சமா்ப்பிக்ககடைசி நாள், நேரம் மற்றும் இடம் | **31.05.2022** காலை 11.00 மணிவரை<br>ஈரோடு மாவட்டகூட்டுறவு பால் உற்பத்தியாளா்கள் ஒன்றியம் லிமிடெட், வாசவிகல்லூரி அஞ்சல்,<br>ஈரோடு 638316 |
| 06 | பெறப்பட்டஒப்பந்தப்புள்ளிகள்<br>திறக்கப்படும் இடம்,நாள் மற்றும் நேரம்<br><br>பகுதி 1 தொழில்நுட்பஒப்பந்தப்புள்ளிகள்<br>பகுதி 2 வணிகநுட்பஒப்பந்தப்புள்ளிகள்<br>ஒப்பந்தப்புள்ளிமுன் விளக்கக்கூட்டம் | ஈரோடுமாவட்ட கூட்டுறவுபால்<br>உற்பத்தியாளா்கள் ஒன்றியம் லிமிடெட்<br>வாசவிகல்லூரி அஞ்சல்,ஈரோடு 638316<br>**31.05.2022** காலை 11.30 மணி<br><br>**31.05.2022** மாலை 3.00 மணி |
| 07 | ஒப்பந்தப்புள்ளிஅலுவலா்<br>பொருத்தமானதுஎனதீா்மானிக்கும்<br>முக்கியமானதகவல் | ஒப்பந்தப்புள்ளிதிறக்கப்படும் நாள் எதிா்பாராதவிதமாக விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் திறக்கப்படும். |

கையொப்பம்

## ஈரோடு மாவட்டத்தில் ஏழு பால் விநியோகவழித்தடங்களில் ப.்.ப்டுவாகனம் இயக்குதல் பணிக்கான ஒப்பந்தஅட்டவணை:

அனுப்புதல்,

பெறுதல்,
பொதுமேலாளர் அவர்கள்,
ஈரோடுமாவட்ட கூட்டுறவுபால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,
வாசவிகல்லூரி, ஈரோடு-638316.

அய்யா,

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தபடிவத்தின் அனைத்துபகுதிகளும் முழுமையாக என்னால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
2. தங்களிடமிருந்து ஒப்பந்தநியமன உத்திரவு வழங்கும் பட்சத்தில் உடனடியாக அனைத்து ஆவணங்களும் அதாவது காப்புத்தொகை செலுத்துதல், முத்திரைத்தாளில் ஒப்பந்தம் சமர்பித்தல், தங்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வது இவ்வொன்றியத்தில் .இனை உறுப்பினராகுதல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேகிறேன்.
3. ஒப்பந்தப் படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து சரத்துகளும் என்னால் முழுமையாக படித்துஅறியப்பட்டுஅதை ஏற்றுக்கொள்கிறேன் என சான்று செய்கிறேன்.
4. ஒப்பந்தம் தொடர்பாக பொதுமேலாளர், ஈரோடு ஒன்றியம் அவர்களால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளுக்கும் நான் கட்டுப்படுவேன்.
5. பக்கம் 01 முதல் -------- பக்கங்கள் உரிய ஒப்பந்தப்படிவம் என்னால் கையொப்பமிட்டு இத்துடன் இணைத்துள்ளேன்.
6. பொதுமேலாளர் அவர்களுக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்த விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளவோ,மறுக்கவோ, திருத்தயமைக்கவோ ஒப்பந்தகாலத்தை ஒத்திவைக்கவோ, தள்ளுபடி செய்யவோ முழு அதிகாரம் உண்டு என்பதை நான் அறிவேன்.
7. ஒப்பந்ததொழில்நுட்பபகுதியில் முன்வைப்புத் தொகையை இணைத்து முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு அனைத்து ஆவணங்களுடன் ஒரு தனிகவரில் போட்டுஅரக்குசீல் வைத்தும், வணிகநுட்பபுள்ளியை முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு ஒரு தனிகவரில் போட்டு அரக்குசீல் வைத்தும் இந்த இரண்டுசீல் வைக்கப்பட்ட கவர்களை வேறொருகவரில் போட்டுஅரக்குசீல் வைத்து எனது முழு முகவரியுடன் ஒவ்வொரு கவரின் மேல் பகுதியில் ஈரோடு மாவட்டத்தின் …………… வழித்தடபால் விநியோக ஒப்பந்தம் என குறிப்பிட்டு பொதுமேலாளர், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு சமர்பிக்கிறேன்.

இடம்:
நாள்:

ஒப்பந்தாரரின் கையொப்பம்

# <u>SCHEDULE “A”</u>

## ஈரோடுமாவட்ட கூட்டுறவுபால் உற்பத்தியாளா்கள் ஒன்றியம் லிட்
## வாசவிகல்லூரி (அஞ்சல்),ஈரோடு–638 316

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் **ஈரோடு** மாவட்டத்தின்…………………பால் விநியோக வழித்தடத்தில் ஒப்பந்தம் வழங்கும்நாள் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ப.்.ப் டுவாகனம் மூலம் பால் விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்.

**தொழில்நுட்பதகவல் விண்ணப்பம் (TECHNICAL BID)**

| | | |
|---|---|---|
| 01 | பால்விநியோகவழித்தடத்தின் பெயர் | ஈரோடு மாவட்டத்தின்…………………..... பால் விநியோகவழித்தடம் |
| 02 | விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் நிரந்தரமுகவரி | |
| 03 | தொலைபேசி -செல்போன் எண் | |
| 04 | ப.்.ப்டுவாகனத்தின் பதிவுஎண் | |
| 05 | ப.்.ப்டுவாகனம் கொள்ளளவு மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு | |
| 06 | ப.்.ப்டு வாகனம் எந்த தேதியில் ப.்.ப்டு செய்யப்பட்டது தொடர்பான (Body Builders Certificate) சான்றிதழ் உள்ளதா? வட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில் ப.்.ப்டு வாகனம் என பதிவு செய்யப்பட்ட சான்று இணைக்கப்பட்டுள்ளதா? | |

ஒப்பந்ததாரர் கையொப்பம்

| | | |
|---|---|---|
| 07 | வாகனத்திற்கு எப்.சி. (F.C.) உரிமம் எந்தத் தேதிவரைஉள்ளது? | |
| 08 | வாகனத்திற்கு எந்த தேதி வரை வரி செலுத்தப்பட்டுள்ளது? | |
| 09 | வாகனத்திற்கு எந்த தேதி வரை காப்பீடு செய்யப்பட்டு உள்ளது? (Insurance Coverage) | |
| 10 | வாகனத்திற்கு எந்த தேதி வரைஉரிமம் உள்ளது? | |
| 12 | டேவணித் தொகை (EMD) செலுத்தியதற்கான விபரம் (கேட்பு வரைவோலை(DD) எண் மற்றும் நாள்) | |
| 13 | PAN No. | |

என்னால் /எங்களால் கொடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி கூறுகின்றேன்/உறுதி கூறுகின்றோம்.

இடம் :

நாள் :

ஒப்பந்ததாரர் கையொப்பம்

# SCHEDULE “B”

## ஈரோடுமாவட்ட கூட்டுறவுபால் உற்பத்தியாளார்கள் ஒன்றியம் லிமிடெட் வாசவிகல்லூரி (அஞ்சல்),ஈரோடு–638 316

ஈரோடு மாவட்ட கூட்டுறவுபால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் **ஈரோடு** மாவட்டத்தின்…………………பால் விநியோகவழித் தடத்தில் ஒப்பந்தம் வழங்கும்நாள் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ப.்.ப்டுவாகனம் மூலம் பால் விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்.

**வணிகநுட்ப தகவல் விண்ணப்பம் (COMMERCIAL BID)**

| | | |
|---|---|---|
| 01 | பால் விநியோகவழித்தடத்தின் பெயர் | ஈரோடு மாவட்டத்தின்………………….பால் விநியோக வழித்தடம் |
| 02 | விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் நிரந்தர முகவரி | |
| 03 | அஞ்சல் முகவரி | |
| 04 | தொலைபேசி/செல்போன் எண் | |
| 05 | ப.்.ப்டு வாகனத்தின் பதிவுஎண் | |
| 06 | கோரும் ஒப்பந்தப்புள்ளி கிலோமீட்டர் ஒன்றுக்கு ப.்.ப்டுவாகனத்திற்கு (எண்ணாலும் எழுத்தாலும்) | ரூ.<br><br>(ரூபாய் |

என்னால்/எங்களால் கொடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி கூறுகின்றேன் /உறுதி கூறுகின்றோம் .

இடம் -
நாள் - ஒப்பந்ததாரர் கையொப்பம்

## ஈரோடுமாவட்ட கூட்டுறவுபால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.
## வாசவிகல்லூரி (அஞ்சல்),ஈரோடு– 638 316
## பால் விநியோகவழித் தடஒப்பந்தவிதிமுறைகள் /நிபந்தனைகள் (2022-2024)

1. ஒப்பந்தகாலம் – ஒப்பந்தம் வழங்கும் நாள் முதல் இரண்டுஆண்டுகள்

| வ. எண் | வழித்தடவிபரம் | கொள்ளளவு (மெ.டன்) | நாளொன்றுக்கு இயங்கும் தூரம் (கி.மீ) பகல் | இரவு | மொத்தம் கி.மீ | முன்வைப்புத் தொகை ரூ. | காப்புத் தொகைரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | EMCCS –B (only Night shift ) puffed vehicle | 5.0 – 7.0 | -- | 42 | 42 | 5000/- | 1,00,000/- |
| 2 | EMCCS –H ( only Night shift ) puffed vehicle | 5.0 – 7.0 | -- | 63 | 63 | 5000/- | 1,00,000/- |
| 3. | Gobi ( Day ) Bhavani (Night ) puffed vehicle | 3 – 3.5 | 219<br>-- | --<br>34 | 253 | 5000/- | 1,00,000/- |
| 4. | Bhavani ( Day& Night) puffed vehicle | 3 – 3.5 | 54 | 74 | 128 | 5000/- | 1,00,000/- |
| 5. | Ammapet (Night ) puffed vehicle | 3.0 – 3.5 | -- | 170 | 170 | 5000/- | 1,00,000/- |
| 6. | Perundurai puffed vehicle | 1.25 – 2.0 | 145 | 70 | 215 | 5000/- | 70,000/- |
| 7. | Annapoorna puffed vehicle | 5.0 – 7.0 | 210 | -- | 210 | 5000/- | 1,00,000/- |
| 8 | Chennai Metro sales (Butter Transportation) | 15.0 – 20.0 | 420 KM (one way only refrigerated vehicle ) | | | 50,000/- | 1,00,000/- |

**ஒப்பந்தம் கோரப்படும் வண்டிகளின் மாடல் 2010 மற்றும் அதற்குமேல் இருக்கவேண்டும். இந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டவண்டியை, வேறு எந்த ஒப்பந்தத்திலும் சேர்க்கக் கூடாது. வண்டியின் ஆர்.சியுக் ஒப்பந்ததாரர் பெயரில் இருந்தால் மட்டும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.**

ஒப்பந்ததாரர்கையொப்பம்

2. ஒப்பந்தப்புள்ளி கோருபவர் வருமானவரி நிரந்தர கணக்குஎண் (PAN.Number) நகலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமா்ப்பிக்க வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளியானது தொழில்நுட்பபகுதி மற்றும் வணிகநுட்ப பகுதி என இரு பகுதிகளாக அடங்கும். ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பமிட்டு கவரின் மேல் தொழில்நுட்பபகுதி மற்றும் வணிகநுட்பபகுதி என எழுதி முழுமையாக தனித்தனி உறைகளிலிட்டு, மூடி முத்திரையிட்டு பின்பு அவைகளை பெரிய உறையிலிட்டு மூடி முத்திரையிட்டு அதன் மேல் கலந்துகொள்ளும் வழித் தடத்தின் பெயா் எழுதப்பட்டு சமா்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஒப்பந்தகாலம் ஒப்பந்த ஆணை வழங்கும் நாள் முதல் இரண்டு ஆண்டுகாலம் ஆகும். ஒப்பந்தகாலம் காலாவதியான பின்பும் தேவைப்படும் பட்சத்தில் ஒப்பந்தகாலத்தை மேலும் ஆறு மாதங்கள் அல்லது மறு ஒப்பந்தம் இறுதி செய்யும் காலம் வரை இதில் எது முந்தையதோ அதுவரை நீட்டிக்க ஒன்றியத்திற்கு அதிகாரம் உண்டு.

5. ஒப்பந்ததாரா் பகல் மற்றும் இரவு நேரங்களில் ஒன்றியத்திலிருந்து ஆவின் முகவா்களுக்குத் தேவையான பால் மற்றும் பால் பொருட்களை ஒன்றியத்தால் நிா்ணயம் செய்யப்பட்டுள்ள காலவரையறைக்குள் ஒன்றியம் நிா்ணயம் செய்யும் வழித்தடத்தில் கொண்டு சோ்க்க வேண்டும்.

6. ஒப்பந்தத்தில் கலந்து கொள்பவா்கள் ஒவ்வொரு பால் விநியோக வழித்தடத்திற்கும் தனித்தனியே ரூ.5000/— முன்வைப்புத் தொகையாக(EMD) ஈரோட்டில் பணம் பெறக்கூடிய வகையில் வங்கி டிமாண்ட் டிராப்ட்—ஐ “ The General Manager, Erode District Co-operative Milk Producers’ Union Ltd, Erode”என்றபெயரில் எடுத்து தொழில்நுட்ப பகுதியுடன் இணைத்து, வண்டிஎண் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். EMD தொகை DD ஆக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகளை அஞ்சல் மூலமாகவும் / நேரிலும் அனுப்பலாம். அஞ்சல் தாமதத்திற்கு இவ்வொன்றியம் எவ்விதபொறுப்பும் ஏற்காது.

ஒப்பந்ததாரா்கையொப்பம்

7. காப்புத் தொகை, ஒப்பந்தம் தேர்வு செய்யப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் வங்கி வரைவோலையாக (Demand Draft) ஒன்றியத்திற்கு செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் மாதமொன்றுக்கு ரூ.5000/-அபராதம் விதிக்கப்படும். ஒப்பந்தகாலம் முடிவடைந்தவுடன் செலுத்தப்பட்ட காப்புத் தொகையில் 75% ஒப்பந்ததாரருக்கு திருப்பி வழங்கப்படும். மீதமுள்ள 25% காப்புத்தொகை ஒப்பந்த ஆண்டுகளின் தணிக்கை முடிந்து ,அதன் அறிக்கைகள் பெற்ற பின் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும். ஒப்பந்ததாரர் செலுத்தும் காப்புத்தொகைக்கு எவ்வித வட்டித்தொகையும் வழங்கப்படமாட்டது.

8. ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர் தாங்கள் செலுத்தியுள்ள காப்புத்தொகையை திரும்பகோரும் போது ஒப்பந்ததாரர் அந்தந்த பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம் / முகவர்களிடமிருந்து தடையில்லா சான்று பெற்று ஒன்றியத்தில் சமர்ப்பித்தால் மட்டுமே காப்புத்தொகை திருப்பி வழங்கப்படும்.

9. ஒப்பந்தம் கிடைத்த ஒப்பந்ததாரர் ஒன்றிய விதிகளின்படி ரூ.10/— (ரூபாய் பத்து மட்டும்) செலுத்தி ஒன்றியத்தில் இணை உறுப்பினராக பதிவு செய்து கொள்ள வேண்டும். இத் தொகை திருப்பி வழங்கப்பட மாட்டாது. இவ்வொன்றிய தேர்தலில் வாக்களிக்கவோ அல்லது ஒன்றியலாபத்தில் பங்கு பெறவோ ஒப்பந்ததாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

10. ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட பத்து தினங்களுக்குள் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள வாகனத்தை ஒன்றிய அலுவலர்கள் முன் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

11. **மற்ற தகுதிகள் அனைத்தும் பெற்று பஃப்டு மட்டும் செய்யாமல் உள்ளவர்களும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ளலாம். அவர்களுக்கு ஒப்பந்தம் கிடைக்கப் பெற்றால் 30 நாட்களுக்குள் சாதாரண வாகனத்தை பஃப்டு (Oil Puff)வாகனமாக மாற்றம் செய்து வாகனத்தை ஒப்பந்தவழித்தடத்தில் இயக்கவேண்டும். தவறும் பட்சத்தில் Puffed வாகனம் இயக்கும் வரை நாளொன்றுக்கு ரூ.2000/-அபராதம் விதித்து வாடகை பில்லில் பிடித்தம் செய்யப்படும்.**

ஒப்பந்ததாரர் கையொப்பம்

12. ப.ஃப்டு வாகனத்தின் குளிர் நிலைத்தன்மைபால் பாக்கெட்டுகள் ஏற்றிய பிறகு ஆறு மணி நேரத்திற்கு 2 ˚C – க்குமேல் வெப்பநிலை அதிகமாகாமல் இருக்க வேண்டும். உதாரணமாக, பால் பாக்கெட்டுகள் ஏற்றும் போது வெப்பநிலை 4 ˚C இருந்தால், ஆறு மணி நேரத்திற்கு பிறகு வெப்பநிலை 6 ˚C – க்குள் தான் இருக்க வேண்டும். தவறும் போது வாகனத்தின் தன்மையை ஒரு வாரகாலத்திற்குள் மாற்றி உரிய தரத்தில் வாகனத்தை இயக்க சமர்ப்பிக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும் தவறும்பட்சத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.250/- அபராதமாக விதிக்கப்படும். இது சம்பந்தமாக ஒன்றிய தரக்கட்டுப்பாடு அலுவலர் அவர்களின் முடிவே இறுதியானது ஆகும்.

13. வாகனத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட கொள்ளளவு உள்ள அளவிற்கு பால் டப்புகள் மற்றும் ஒன்றியத்தில் அனுப்பப்படும் இதரப் பொருட்களை வண்டியில் ஏற்றிச் செல்ல வேண்டும். ஒப்பந்தம் பெற்ற ஒப்பந்ததாரரிடம் அவ்வழித்தடத்திற்கு தேவையான பால் டப்புகள் ஒப்படைக்கப்படும். ஒப்பந்தம் முடிவுறும் தருவாயில் ஒன்றியத்தின் Prepac பிரிவுக்கு பெறப்பட்ட பால் டப்புகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும். இதில் எண்ணிக்கையில் ஏதேனும் குறைவு ஏற்படின் பால் டப்பு ஒன்றுக்கு அன்றைய சந்தை மதிப்பில் தொகை பிடித்தம் செய்வதுடன் ரூ.1000/- ம் அபராதம் விதிக்கப்படும்.

14. ஒப்பந்தகாலத்தில் பால் விநியோக வழித் தட மார்க்கத்தை அல்லது வழித் தடத்தினை மாற்றி அமைக்கவோ, தடத்தின் தூரத்தைக் கூட்டவோ ,குறைக்கவோ இவ்வொன்றியத்திற்கு முழு உரிமை உண்டு. மாறுதல் குறித்து விபரம் கிடைத்தவுடன் ஆணைக்கு இணங்க ஒப்பந்ததாரர் வண்டி ஓட்டுதல் வேண்டும்.

15. ஒரே ஒப்பந்ததாரர் ,ஒன்றுக்கு மேற்பட்ட தடங்களில் ஒப்பந்ததாரர்களாக ஏற்கப்பட்டு பால்பாக்கெட் ஏற்றிச் செல்லும் தடத்தில் எந்த தடத்திலாவது இழப்பு ஏற்படுமாயின் அத்தடத்தின் இழப்பை ஈடுகட்ட இயலாத நிலையில் அந்த ஒப்பந்ததாரர் ஒன்றியத்தின் வேறு பிரிவில் வண்டி இயக்கி வந்தால் அதில் பெறப்படும் வாடகை மற்றும் காப்புத் தொகையிலிருந்து இந்த இழப்பினை ஈடு செய்ய ஒன்றியத்திற்கு உரிமை உண்டு.

16. இந்த ஒப்பந்தம், ஒன்றியத்தின் பால் விநியோக வண்டிகளின் நிலைமை திருப்திகரமாக இல்லாது இருப்பின் அல்லது பால் விநியோகம் செய்யும் வண்டிகள் தேவையில்லை எனக் கருதும் போது ஒரு மாத கால நோட்டீஸ் கொடுத்து ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

17. ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு வாரகாலத்திற்குள் ஒப்பந்ததாரர் ரூ.100/— மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்த விதிகளை ஏற்று ஒன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் மாதமொன்றுக்கு ரூ.1000/-அபராதம் விதிக்கப்பட்டு பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

18. ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர், ஒரு வாரகாலத்திற்குள் ஒன்றியம் குறிப்பிடும் வங்கியில் கணக்கு ஆரம்பித்து ,அதற்கான கணக்கு எண்ணை இவ்வொன்றியத்திற்கு தெரிவிக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒருமுறை வழங்கும் வாடகைத் தொகை வங்கியில் இருசால் செய்யப்படும். வாடகைத் தொகையை வங்கி கணக்கின் மூலமே பெற்றுக் கொள்ள வேண்டும். வாடகைபட்டியல்கள் பிரதி மாதம் 5 — ம் தேதியும், 20 — ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். காலதாமதமாகவரும் பட்டியல்களின் நிலுவைக்கு ஒன்றியம் பொறுப்பேற்காது.

19. பால் விநியோகம் செய்யும் ப.ஃப்டு வண்டியின் மேல் பாகம், பக்கவாட்டு பகுதிகள் தினசரி தண்ணீரால் கழுவப்பட்டு, உட்புறம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தவாகனத்தின் முகப்பில் "ஆவின், ஈரோடு ஒப்பந்தவண்டி"(On Contract with Aavin, Erode) என்றபெயர் வெள்ளை மற்றும் நீலநிறத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். மேலும் ஒன்றியம் கோரும் விளம்பரத்தையும் எழுத வேண்டும்.

20. பால்பண்ணையிலிருந்து பால் கேன்/டப்புகள் மற்றும் காலி டப்புகள் / கேன்களை வண்டியில் ஏற்றவும், இறக்கவும் தனது சொந்த செலவில் நபர்களை ஒப்பந்ததாரர் நியமித்துக் கொள்ள வேண்டும். மேலும் பால்கேன்கள்/டப்புகள் ,காலி கேன்கள்/டப்புகள் போன்றவற்றை மிகவும் பாதுகாப்பான முறையில் கையாளப்பட வேண்டும். கவனக்குறைவால் பாலுக்கோ, பால் டப்புகளுக்கோ சேதாரம் ஏற்பட்டாலும் ,பால் டப்புகளின் எண்ணிக்கைகள் குறைவு ஏற்பட்டாலும் அதற்கான முழுத் தொகையினை ஒப்பந்ததாரரின் வாடகைப் பட்டியலில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

21. ஒப்பந்தவண்டியின் கடைசிவாடகைப் பட்டியலை ஒப்பந்ததாரா் ஒப்பந்தகாலம் முடிந்தவுடன்,தங்கள் பால் விநியோகவழித்தடத்தில் உள்ள முகவா்/பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து **“வரவேண்டிய இனங்கள் ஏதும் இல்லை”** என்ற சான்றுடன் 30 நாட்களுக்குள் விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் சமா்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறான சான்றுடன் சமா்ப்பிக்கப்பட்ட பின்பு மட்டுமே வண்டியின் கடைசி வாடகைபட்டியல் அனுமதிக்கப்பட்டு ,தொகை வழங்கப்படும்.

22. ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டு அது முடிவுறும் காலமோ அல்லது மறு ஒப்பந்தம் விடப்பட்டு ஆணை பிறப்பிக்கும் காலத்திற்கு முன்போ ,ஒப்பந்ததாரரே வண்டியை நிறுத்திக் கொண்டால் அவா் தனது காப்புத் தொகையை இழப்பதோடு ஒப்பந்ததாரா் எந்த “ஆவின் நிறுவனங்களிலும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள தகுதிஅற்றவா்” என முடிவு செய்யப்படும்.

23. வேலை நிறுத்தம், பந்த் மற்றும் இதர எதிர்பாராத சூழ்நிலைகளினால் போக்குவரத்து தடைபட்டால், பால் விநியோகத்திற்கு மாற்று வழிகளை கடைப்பிடித்து தம்முடைய சொந்தப் பொறுப்பில் பால் விநியோகம் செய்து தர வேண்டியது ஒப்பந்ததாராின் கடமையாகும். மேலும் ஏதேனும் விபத்து ஏற்படின் பால் மற்றும் பால் உபபொருட்களுக்கு சேதாரம் அல்லது கெட்டுபோனால் அதனால் ஏற்படும் இழப்புக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவாா். மேலும் நாளொன்றுக்கு ரூ.1000/-அபராதம் விதிக்கப்படும்.

24. எதிர்பாராத விதமாக வண்டி பழுதடைந்துவிட்டால், மாற்று ஏற்பாடு செய்து உரிய காலத்தில் பாலை பூத்துகளில் / நிறுவனங்களில் ஒப்படைக்க வேண்டியது ஒப்பந்ததாராின் பொறுப்பாகும்.

ஒப்பந்ததாரா் கையொப்பம்

25. பால் விநியோக வாகனம் ஓட்டும் போது கிளீனருடன் தான் வண்டியை இயக்க வேண்டும். பால் டப்புகள் ,கேன்கள் வண்டி ஓட்டும்போது சாய்ந்துவிடாமல் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டியது அவரது பொறுப்பாகும். ஒன்றியத்தின் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சிப்பந்திகளிடம் வண்டியின் ஓட்டுநர் மற்றும் கிளீனர் நாகரிகமாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ள வேண்டும். அவர்களது நடத்தை சரியில்லை எனத் தெரியவந்தால் குறிப்பிட்ட நபர்களை பால் விநியோக வண்டியில் செல்ல அனுமதிக்கக் கூடாது என உத்திரவிட ஒன்றியத்திற்கு உரிமையுண்டு. ஒன்றிய உத்திரவிற்கு கட்டுப்பட்டு பணியாளர்களை மாற்றி அமர்த்த ஒப்பந்ததாரர் கடமைப்பட்டவராவார்.

26. சுங்கச் சாவடிகளில் வசூலிக்கப்படும் சுங்கவரிக்கு ஒப்பந்ததாரரே முழுப் பொறுப்புஆவார்.

27. ஒப்பந்தம் பெற்று பால் விநியோக வண்டிகள் இயங்கிவரும் நிலையில் ஒப்பந்தவண்டிகள் பழுதடைந்து விட்டாலோ அல்லது எதிர்பாராத விபத்து போன்ற தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஒப்பந்ததாரர் தங்கள் பெயரில் உள்ள மாற்று வண்டியை ஒன்றிய அனுமதி பெற்று பால் விநியோகவழித் தடத்தில் நிரந்தர மாற்று வண்டியாக இயக்கிக் கொள்ளலாம். அவ்வாறான நிரந்தர மாற்றுவண்டியானது தயாரிப்பு ஆண்டு 2010 – க்கு குறைவில்லாத கொள்ளளவு, தரம் (Specification) ஆக இருக்க வேண்டும்.

மேலும் நிரந்தர மாற்றுவண்டி கட்டணமாக ரூ.1,000/ – (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட வேண்டும். ஒன்றிய அனுமதி பெறாமல், ஒப்பந்த வாகனம் இன்றி தொடர்ந்து மாற்றுவண்டி இயக்கி வந்தால் 15 நாட்களுக்குமேல் 30 நாட்களுக்குள் நாளொன்றுக்குரூ.500/- அபராதம் விதிக்கப்படும். அதன்பின்னரும் தொடர்ந்து மாற்று வாகனம் இயக்கி வந்தால், எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

28. ஒப்பந்ததாரர் நாள்தோறும் எடுத்துச்செல்லும் பால் டப்புகளை அடுத்தநாள் தவறாமல் எடுத்து வரவேண்டும். எண்ணிக்கையில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால் பால் டப்பு ஒன்றுக்கு அபராதமாக ரூ.50/- நாளொன்றுக்கு பிடித்தம் செய்யப்படும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

29. ஒப்பந்தம் திறக்கும் நாளிலிருந்து அதன் ஒப்பந்தம் முடியும் வரையில் அரசால் டீசல் விலை உயர்த்தப்பட்டாலோ அல்லது குறைக்கப்பட்டாலோ ,கிலோமீட்டருக்கு விகிதாச்சார அடிப்படையில் விலை உயர்வு அல்லது குறைவு செய்யப்படும்.

30. ஒப்பந்ததாரர் தமது வழித் தடத்தில் ஒப்பந்தவண்டியினை கொண்டு மட்டுமே பால் விநியோகம் செய்ய வேண்டும். தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் ஒப்பந்ததாரர் கேட்டுக் கொள்ளும் பட்சத்தில் அவரது ஒப்பந்தத்தை வேறு நபருக்கு மாற்றிக் கொடுக்க ஒன்றியத்திற்கு அதிகாரம் உள்ளது. அவ்வாறான சூழ்நிலையில் ஒப்பந்ததாரர் செலுத்திய காப்புத்தொகை ஒன்றியத்தால் பறிமுதல் செய்யப்படும். பெயர்மாற்றம் செய்துகொள்ளும் ஒப்பந்ததாரர் காப்புத் தொகையுடன் பெயர் மாற்றக் கட்டணமாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) செலுத்தப்பட வேண்டும். பெயர் மாற்றம் செய்யும் வண்டியானது தயாரிப்பு ஆண்டு 2010 — க்கு குறைவில்லாத கொள்ளளவு ,தரம் (Specification) ஆக இருக்க வேண்டும். மேலும், ஒப்பந்தத்தின் அனைத்து சரத்துக்களுக்கும் மாற்று வாகன உரிமையாளர் பொறுப்பேற்க வேண்டும்.

31. **மோட்டார் வாகனச் சட்டப்படி வாகனத்தின் பதிவுஎண் சான்றிதழில் பஃப்டு/மூடியவாகனம் பதியப்பட்டு இருக்கவேண்டும்.** வாகனம் முழுக் காப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். மோட்டார் வாகனச் சட்டப்படி ஒப்பந்தவாகனத்தின் சாலைவரி செலுத்துவது, ஒப்பந்தவண்டிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இன்சூரன்ஸ், வருங்காலவைப்புநிதி போன்றவற்றில் சட்டப்பூர்வமான விதிகளை கடைப்பிடித்து ஒப்பந்ததாரர்களே செலுத்தி ,அதற்குரிய சலான் நகல்களை ஒன்றியத்திற்கு பிரதிமாதம் கொடுக்க வேண்டும். மேலும், பால் விநியோகவழித் தடங்களில் ஏற்படும் விபத்துகளுக்கும், அதனால் ஏற்படும் அனைத்துவிதமான இழப்புகளுக்கும் பால் விநியோகவண்டி ஒப்பந்ததாரர்களே முழு பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுசம்பந்தமாக ஒன்றியம் எவ்வகையிலும் பொறுப்பேற்காது.

32. ஒன்றியத்தின் பால் மற்றும் பால் உபபொருட்கள் அல்லது அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் தவிர வேறு பொருட்களை ஏற்றிவரக்கூடாது. தவறினால் ஒப்பந்தம் உடனடியாக ரத்து செய்யப்படுவதுடன் அவரதுபில் மற்றும் காப்புத் தொகை முழுவதும் பறிமுதல் செய்யப்படும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

33. காப்புத்தொகையை விட அதிகமான தொகை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டால், அவற்றை ஈடுகட்ட வேண்டியது ஒப்பந்ததாரரின் பொறுப்பு ஆகும். தவறும் பட்சத்தில் ஒப்பந்ததாரரின் இதர சொத்துக்களிலிருந்து வசூல் செய்ய ஒன்றியத்திற்கு உரிமை உண்டு.

34. ஒப்பந்தகாலத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ஒப்பந்தவண்டியினை ஒப்பந்ததாரர் திடீரென நிறுத்திக் கொண்டால், ஒப்பந்ததாரர் தனது காப்புத்தொகையை இழப்பதுடன், மாற்று ஏற்பாடு செய்து வண்டியை இயக்கும் பட்சத்தில் ஒன்றியத்திற்கு ஒப்பந்தகாலம் முடியும் வரை ஏற்படும் கூடுதல் செலவினத் தொகை ,மறு ஒப்பந்தத்திற்கு ஆகும் செலவு, ஒப்பந்ததாரர் ஒப்புக் கொண்டு விநியோகவழித் தடத்திற்கு வாகனம் அனுப்பும் காலம் வரை ஒப்பந்தவிலைக்கு மேல் ஆகும் செலவுத் தொகைக்கு ஒப்பந்ததாரரே முழுப் பொறுப்பாவார். இவ்விழப்பிற்கு ஒப்பந்ததாரரின் நிலுவைப் பட்டியல் தொகை ,காப்புத் தொகை மற்றும் இதர சொத்துக்களில் இருந்து ஈடு செய்யப்பட்டு மீதி தொகை வழங்கப்படும்.

35. வழித்தடங்களில் புதிய முகவர்களை சேர்க்கும் போதும் முகவர்கள் பால் எடுக்காதபோதும் வாகன இயக்க தூரம் மாறுதலுக்குட்பட்டது. இத்தகைய இயக்கதூர மாறுதல்கள் உடனடியாக ஒன்றியத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் நாள் ஒன்றுக்கு ரூ.1,000/-அபராதம் விதிக்கப்படுவதுடன், ஒப்பந்தபணி ஆணை வழங்கும்போது இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் கண்டுள்ள கால நிர்ணயத்தின் அடிப்படையிலும் முகவர்களின் வரிசை அடிப்படையிலும் பால் விநியோகம் செய்யப்பட வேண்டும். இதில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டு முகவர்களிடமிருந்து புகார்கள் வரும்பட்சத்தில் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுப்பதுடன் ரூ.1,000/— அபராதம் விதிக்கப்பட்டு வாடகைபில்லில் பிடித்தம் செய்யப்படும்.

36. வாகனத்தின் அனைத்து சான்றுகளும், டிரிப் சீட்டு, ஓட்டுநர்உரிமம் ஒன்றியத்திலிருந்து வழங்கப்பட்ட பணி ஆணை, ஒன்றியத்திலிருந்து ஓட்டுநர் கிளினர்களுக்கு வழங்கப்பட்ட அடையாளஅட்டையை வாகனத்தில் எப்போதும் வைத்திருக்க வேண்டும். தேவைப்படும்போது ஒன்றிய அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் ஆய்வுக்கு காண்பிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் ரூ.1,000/— அபராதம் விதிக்கப்பட்டு வாடகை பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

37. பால் விநியோக வாகனத்திற்கென்றே தனிகைப்பேசி இணைப்பு அவசியம் வைத்திருக்க வேண்டும். ஒன்றிய அலுவலர்கள், முகவர்கள் அழைக்கும்பொழுது தவறாமல் பதிலளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ரூ.1000/— அபராதம் விதிக்கப்பட்டு வாடகைபில்லில் பிடித்தம் செய்யப்படும்.

38. இவ்வலுவலகத்தில் இருந்து நிர்ணயம் செய்யப்படும் வழித்தடத்தில் கொடுக்கப்பட்டுள்ள காலஅட்டவணைப்படி பால் விநியோகம் செய்யவேண்டும். காலதாமதமாகபால் விநியோகம் செய்தால் நாள் ஒன்றுக்குரூ.1,000/— அபராதம் விதிக்கப்படும்.

39. ஒப்பந்ததாரர் பிரிபேக் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் பால் பாக்கெட்டுகளைஉடனுக்குடன் அடுக்கி வைக்க ஏதுவாக ஒன்றியம் நிர்ணயம் செய்யும் நேரத்திற்க்குள் காலி பால்டப்புகளை ஒன்றியத்தில் ஒப்படைக்க வேண்டும் தவறும் பட்சத்தில் ரூ.1,000/— அபராதம் விதிக்கப்பட்டு வாடகைபில்லில் பிடித்தம் செய்யப்படும்.

40. காலதாமதமாக பால் விநியோகம் செய்யப்படுமேயானால், கெட்டுப்போன பாலின் கிரயத்தொகை மற்றும் ஒப்படைக்காத பால், பால்உபபொருட்களுக்கான தொகை போன்றவற்றின் அன்றைய மொத்த சில்லரை விற்பனை விலையில் இரு மடங்கு அல்லது ரூ.2,000/— இவற்றில் எது அதிகமோ அந்தத் தொகையை அபராதமாக வசூலிக்கப்படும்.

41. **ஒப்பந்தகாலத்தில் வாகனம் F.C. செய்வதற்காகவும் விபத்து மற்றும் பழுது நிவர்த்திக்காக ஆண்டுக்கு 15 நாட்கள் மட்டுமே மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்படும். மாற்று வாகனத்தை ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்ய வேண்டும். F.C.க்காக வண்டி அனுப்பப்படுவதற்கு, 10 நாட்களுக்கு முன்னர் பொதுமேலாளருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். 15 நாட்களுக்குள் ஒப்பந்தவாகனத்தை இயக்காவிடில் நாளொன்றுக்கு ரூ.500/- அபராதமாக வசூலிக்கப்படும். மாற்றுவண்டியானது ஒப்பந்தவண்டியின் மாடல் மற்றும் கொள்ளளவிற்கு குறைவில்லாமல், Puffed வாகனமாக இருக்க வேண்டும்.**

ஒப்பந்ததாரர் கையொப்பம்

42. ஒன்றியத்திலிருந்து அனுப்பப்படும் பட்டியல்கள், கடிதங்கள் போன்றவற்றை முகவர்களிடம் ஒப்படைப்பதும், அவர்கள் கொடுக்கும் சலான்கள் போன்றவற்றை பெற்று ஒன்றியத்தில் சேர்ப்பதும் ஒப்பந்ததாரரின் பொறுப்பு ஆகும். தேவையான அவசரகாலங்களில் முகவர்களிடம் பணம் பெற்று ஒன்றியத்தில் ஒப்படைக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் கடமையாகும். இதனை சரிவர செய்யாவிடின் ரூ.1,000/— அபராதம் விதிக்கப்படும்.

43. ஒப்பந்ததாரர்ஒப்பந்தம் வழங்கப்பட்ட 15தினங்களுக்குள் வாகனத்தின் FSSAI சான்றிதழ் நகலை ஒன்றியத்திடம் ஒப்படைக்க வேண்டும். மேலும் ஒப்பந்தவாகனத்தின் முன்புறத்தில் வரையறுக்கப்பட்ட அளவில் FSSAI சான்றிதழ் எண் பொறிக்கப்பட்டு இருக்கவேண்டும்.

44. ஒப்பந்ததாரர் தங்கள் வாகனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் இ.எஸ்.ஐ (E.S.I), வருங்காலவைப்புநிதி செலுத்திய சலான்களை ஒவ்வொரு மாதபட்டியலுடன் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

45. பந்த் மற்றும் அவசரகாலங்களில் இயக்கப்படும் மாற்றுவண்டியானது தயாரிப்பு ஆண்டு 2010—க்கு குறைவில்லாத மாடல் உள்ளவாகனமாக இருக்க வேண்டும். மேலும் ஒப்பந்தவாகனத்தின் கொள்ளளவு மற்றும் தனிச்சிறப்பு (Specification) உள்ளதாக இருக்கவேண்டும். தவறும் பட்சத்தில் வாகனமாடல் குறைவுக்கு அபராதமாக நாளொன்றுக்கு ரூ.500/—ம், கொள்ளளவு குறைவாக இருப்பின் அதற்கு அபராதமாக நாளொன்றுக்கு ரூ.500/-ம் என தனித்தனியாக வசூலிக்கப்படும்.

46. வாகனத்தில் தேவைப்பட்டியலைவிட அதிகமானபால் பாக்கெட்டுகள் ஏற்றி இருப்பதை ஒன்றியஅலுவலர்கள் / பாதுகாவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டால் பாலுக்கான தொகை மற்றும் அபராதமாக ரூ.20,000/— வசூலிக்கப்படுவதுடன் இதற்கு சம்பந்தப்பட்ட ஓட்டுநர், கிளினரை எந்த சூழ்நிலையிலும் ஒன்றியவளாகத்தில் நுழைய அனுமதிக்க இயலாது. வாகனத்தை இயக்க தேவையான மாற்று ஓட்டுநரை மற்றும் உதவியாளரை ஒப்பந்ததாரர் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், இதுபோன்ற தவறுகள் ஒப்பந்தகாலத்தில் மூன்றுமுறைக்குமேல் தொடர்ந்தால் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதுடன் ஒன்றியத்தின் அனைத்து சரத்துகளின்படி ஒப்பந்ததாரர் பொறுப்பேற்க வேண்டும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

47. ஓட்டுநர்கள் பால் மற்றும் பால் பொருட்களை முகவர்களிடம் ஒப்படைக்கும்போது சுமுகமான உறவு வைத்திருக்க வேண்டும். முகவர்கள் இதுதொடர்பாக புகார் ஏதும் தெரிவித்தால் கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன் ரூ.1,000/— அபராதம் விதிக்கப்படும்.

48. ஒன்றியத்தின் சார்பில் நடத்தப்படும் முகவர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட வழித்தட ஒப்பந்ததாரர் மற்றும் ஓட்டுநர் தவறாது கலந்து கொள்வதுடன் முகவர்கள் தெரிவிக்கும் குறைகளை உடன் சரி செய்ய வேண்டும். கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருந்தாலோ குறைகளை சரி செய்யாமல் இருந்தாலோ ரூ.1,000/— அபராதம் விதிக்கப்படும். மேலும், இதுபோன்ற தவறுகள் ஒப்பந்தகாலத்தில் ஐந்து முறைக்குமேல் தொடர்ந்தால் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

49. ஒப்பந்ததாரர் பால் மற்றும் பால் பொருட்களுக்கான அனுமதிச் சீட்டு (Gate Pass) பெற்று வெளியில் சென்ற பிறகு முகவர்களுக்கு பொருட்களை ஒப்படைக்கவில்லை என தெரியவந்தால் பொருளுக்கான தொகையின் மூன்றுமடங்கு அல்லது ரூ.2,000/— இதில் எது அதிகமோ அதனை அபராதமாக விதித்து வாடகைப் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

50. **ஒப்பந்ததாரர் பால் பண்ணையில் பால் பாக்கெட்டுகளை சரிபார்த்து உடைந்த பாக்கெட்டுகள் இல்லாமலும் காலம் தாழ்த்தாமலும் வாகனத்தில் ஏற்றவேண்டும். உடைந்தபால் பாக்கெட்டுகளுக்கு எவ்வித இழப்பிடும் வழங்க இயலாது. மேலும் முகவர்கள் பால் பாக்கெட்டுகள் சம்மந்தமாக எழுத்துபூர்வமான புகார் ஏதேனும் கிடைக்கப்பெற்றால் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரின் வாடகைபில்லில் பால் பாக்கெட்டுகளுக்கு உண்டான அதிகபட்ச விற்பனை விலை மற்றும் கூடுதலாக ரூ.1000/— அபராதமாக விதிக்கப்படும். பால் பாக்கெட்டுகள் வாகனத்தில் ஏற்றகாலம் தாழ்த்துவது கண்டறியப்பட்டால் நாளொன்றுக்கு ரூ.500/- அபராதம் விதிக்கப்படும்.**

51. **வாகன ஓட்டுநரால் பால் மற்றும் பால் பொருட்கள் விநியோகிப்பதில் காலதாமதம் ஏற்பட்டு முகவர்களால் திரும்ப அனுப்பப்படும்போது, அதனால் ஏற்படும் இழப்புக்கு ஒப்பந்ததாரரே முழுப்பொறுப்பாவார்.**

ஒப்பந்ததாரர் கையொப்பம்

52. அரசு அறிவிக்கும் வரி தொடர்பான நிபந்தனைகளுக்கு உட்பட்டே தங்களின் வாடகைபட்டியலுக்கான தொகை வழங்கப்படும்.

53. மேற்கண்ட விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட எல்லாவித நிகழ்ச்சிகளுக்கும் ஒன்றிய பொதுமேலாளர் அவர்களின் முடிவே இறுதியானதாகும். ஒப்பந்ததாரர் அவற்றிற்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டும்.

54. ஒன்றியம் அவ்வப்போது விதிக்கும் நிபந்தனைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் ஒப்பந்ததாரர் கட்டுபட்டவராவார். ஒன்றியத்திற்கும் ஒப்பந்ததாரருக்கும் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை துணைப்பதிவாளர் (பால்வளம்), ஈரோடு அவர்களின் வழக்குமன்றத்தின் மூலம் மட்டுமே தீர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

55. எந்தவொரு ஒப்பந்த நிபந்தனைகளையும் சேர்க்கவோ ,நீக்கவோ, ரத்து செய்யவோ , மாற்றம் செய்யவோ பொதுமேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

ஒப்பந்ததாரர்கையொப்பம்

## ஈரோடு ஒன்றியத்திலிருந்து சென்னை இணைய பால்பண்ணைகளுக்கு பால் உபபொருட்கள் கொண்டு சேர்த்தல் பணிக்கான ஒப்பந்த அட்டவணை:

அனுப்புதல்,

பெறுதல்,
பொதுமேலாளர் அவர்கள்,
ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,
வாசவிகல்லூரி, ஈரோடு-638316.

அய்யா,

1.இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தபடிவத்தின் அனைத்து பகுதிகளும் முழுமையாக என்னால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

2.தங்களிடமிருந்து ஒப்பந்த நியமன உத்திரவு வழங்கும் பட்சத்தில் உடனடியாக அனைத்து ஆவணங்களும் அதாவது காப்புத்தொகை செலுத்துதல், முத்திரைத்தாளில் ஒப்பந்தம் சமா்பித்தல். தங்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வது இவ்வொன்றியத்தில் .இனை உறுப்பினராகுதல் தொடா்பான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேகிறேன்.

3.ஒப்பந்தப் படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து சரத்துகளும் என்னால் முழுமையாக படித்து அறியப்பட்டு அதை ஏற்றுக்கொள்கிறேன் என சான்று செய்கிறேன்.

4.ஒப்பந்தம் தொடா்காக பொதுமேலாளா், ஈரோடு ஒன்றியம் அவா்களால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளுக்கும் நான் கட்டுப்படுவேன்.

5.பக்கம் 01 முதல் -------- பக்கங்கள் உரிய ஒப்பந்தப்படிவம் என்னால் கையொப்பமிட்டு இத்துடன் இணைத்துள்ளேன்.

6.பொதுமேலாளா் அவா்களுக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்த விதிமுறைகளை ஏற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ, திருத்தயமைக்கவோ ஒப்பந்தகாலத்தை ஒத்தி வைக்கவோ, தள்ளுபடி செய்யவோ முழு அதிகாரம் உண்டு என்பதை நான் அறிவேன்.

7.ஒப்பந்த தொழில்நுட்ப பகுதியில் முன்வைப்புத் தொகையை இணைத்து முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு அனைத்து ஆவணங்களுடன் ஒரு தனி கவரில் போட்டு அரக்கு சீல் வைத்தும், வணிக நுட்பபுள்ளியை முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு ஒரு தனி கவரில் போட்டு அரக்கு சீல் வைத்தும் இந்த இரண்டு சீல் வைக்கப்பட்ட கவா்களை வேறொரு கவரில் போட்டு அரக்கு சீல் வைத்து முழு முகவரியுடன் ஒவ்வொரு கவரின் மேல் பகுதியில் **“சென்னை இணைய பால் பண்ணைகளுக்கு வெண்ணெய் கொண்டு சேர்த்தல் ஒப்பந்தம்”** என குறிப்பிட்டு பொதுமேலாளா், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளா்கள் ஒன்றியத்திற்கு சமா்பிக்கிறேன்.

இடம்:
நாள்:

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

# SCHEDULE "A"

**THE ERODE DISTRICT CO-OPERATIVE MILK PRODUCERS' UNION LTD**
**Vasavi College Post, Erode 638 316**

**Tender for Transportation of products to Metro Dairies at Chennai for a period Two Years from the date of award of contract**

## TECHNICAL BID

| | | |
|---|---|---|
| 1 | Name of the Tenderer with Registered Address | |
| 2 | e-mail id | |
| 3 | PAN Number | |
| 4 | Telephone / Mobile Number | |
| 5 | Bank Approval Certificate Number (Obtained from Indian Bankers' Association (Xerox copy attested) | |
| 6 | Remittance of EMD Particulars (Enclosed Demand Draft ) Payable at Erode | |

We hereby certify that we have thoroughly studied and understood the Tender terms & conditions, details of works to be carried out and fully understand the nature of work.

Siganture of the Tenderer
with seal and date

Encl: As above

# <u>SCHEDULE "B"</u>

**THE ERODE DISTRICT CO-OPERATIVE MILK PRODUCERS' UNION LTD**
**Vasavi College Post, Erode 638 316**
**<u>COMMERCIAL BID</u>**

Tender Period: Two Years from the date of award of contract

| | | |
|---|---|---|
| 1 | Vehicle Type: | 15.0-20.0 MTs of Refrigerated Vehicle (For Butter / Ghee ) |
| 2 | Name of the Tenderer with Registered Address | |

**<u>Freight Charges should be quoted inclusive of Toll Gate Fees, Loading & Unloading Charges and Packing Materials</u>**

**02.RATE OFFERED**

| | | |
|---|---|---|
| I. | For Full Truck load of 15.0 – 20.0 MTs Gross wt. | Rs.<br><br>(Rupees. |

SIGNATURE OF THE TENDERER
WITH SEAL AND DATE

## ஈரோடுமாவட்ட கூட்டுறவுபால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.
## வாசவிகல்லூரி (அஞ்சல்),ஈரோடு– 638 316

சென்னை ஆவின் பால்பண்ணைகளுக்கு (மாதவரம், அம்பத்தூர், சோலிங்கநல்லூர் மற்றும் திருவண்ணாமலை) ஈரோடு பால்பண்ணையிலிருந்து பால் பொருட்களை ஏற்றிச் சென்று ஒப்படைக்க ஒப்பந்த விதிமுறைகள்/நிபந்தனைகள் (2022 – 2024):

1. ஒப்பந்தகாலம்: ஒப்பந்தம் வழங்கும் நாள் முதல் இரண்டுஆண்டுகளுக்கு

| வ. எண் | வழித்தடவிபரம் | கொள்ளளவு | இயங்கும் தூரம் | முன்வைப்புத் தொகை | காப்புத்தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | குளிரூட்டபட்டவாகனத்தின் மூலம் சென்னை இணைய பால்பண்ணைகளுக்கு வெண்ணெய் கொண்டுசெல்லுதல் | 15.0 – 20.0மெ.டன் வாகனம் | 420 கி.மீ (One way Only) | ரூ.50,000 | ரூ.1,00,000/- |

2. ஒப்பந்தப்புள்ளி கோருபவர் வருமானவரி நிரந்தர கணக்குஎண் (PAN.Number) நகலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளியானது தொழில்நுட்பபகுதி மற்றும் விலைப்புள்ளி பகுதி என இரு பகுதிகளாக அடங்கும். ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பமிட்டு கவரின் மேல் தொழில்நுட்ப பகுதி மற்றும் விலைப்புள்ளி பகுதி என எழுதி முழுமையாக தனித்தனி உறைகளிலிட்டு, மூடி முத்திரையிட்டு பின்பு அவைகளை பெரிய உறையிலிட்டு மூடி முத்திரையிட்டு அதன் மேல் சென்னைக்கு பால் உபபொருட்கள் எடுத்துச் செல்லும் வாகன ஒப்பந்தம் என எழுதப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஒப்பந்தகாலம் ஒப்பந்த ஆணை வழங்கும் நாள் முதல் இரண்டு ஆண்டு காலம் ஆகும். ஒப்பந்தகாலம் காலாவதியான பின்பும் தேவைப்படும் பட்சத்தில் ஒப்பந்தகாலத்தை மேலும் ஆறு மாதங்கள் அல்லது மறு ஒப்பந்தம் இறுதி செய்யும் காலம் வரை இதில் எது முந்தையதோ அதுவரை நீட்டிக்க ஒன்றியத்திற்கு அதிகாரம் உண்டு.

ஒப்பந்ததாரர்கையொப்பம்

5. ஒப்பந்தப்புள்ளியானது முற்றிலுமாக கீழ்கண்ட காரணங்களால் நிராகரிக்கப்படும்:-

   a) ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்கும் ஒப்பந்தப்புள்ளியில் முன்வைப்புத் தொகை ரூ.50,000/— வங்கிவரைவோலை“ The General Manager, Erode District Co-operative Milk Producers’ Union Ltd, Erode” என்ற பெயரில் இல்லை என்றாலும்,

   b) Indian Bankers’ Association — னால் அங்கீகரிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்ட நகல் இணைக்கப் பெறவில்லை என்றாலும்,

   c) டெக்னிக்கல் பிட் மற்றும் கமர்சியல் பிட் ஆகியவற்றை தனித்தனி கவரில் இட்டு, மூடி முத்திரை இடப்படாமலும், பின்னர் அவற்றை பெரிய கவரில் வைத்து மூடி முத்திரையிடாமலும் இருப்பினும்,

   d) சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்படிவத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்ததாரர், கையொப்பமிடவில்லை என்றாலும் (ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பக்கங்கள் உட்பட).

   e) குறித்த காலத்திற்கு பின்னால் வந்து சேரும் ஒப்பந்தப்புள்ளிகள்.

6. உணவு பொருட்களை ஏற்றிச் செல்வதால் ஒப்பந்ததாரர் பால் உபபொருட்களை ஏற்றிச் செல்ல அனுப்பும் வாகனம் மிகவும் சுத்தமாகவும், வேறு எந்தவகையான துர்நாற்றம் மற்றும் அழுக்கு போன்றவை இருக்கக் கூடாது.

7. ஏற்றிச் செல்லும் பால் பொருட்களின் அளவு, எடை மற்றும் பேக்கிங் போன்றவைகளை சரிபார்த்து எடுத்துச் செல்ல வேண்டியது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

8. போக்குவரத்து வாடகை கட்டண பட்டியல் மொத்த எடைக்கு அதாவது பொருட்களின் எடை மற்றும் பேக்கிங் பொருட்களின் எடையையும் சேர்த்து நேர் செய்ய வேண்டும்.

9. இவ்வொன்றியத்திலிருந்து பால் பொருட்களை ஏற்றிச் செல்லும் வழியில் ஏதேனும் இழப்பு, கெட்டுப் போகுதல், பாக்கெட்கள் உடைதல் போன்றவை ஏற்படின் அதற்குண்டான தொகையை ஒப்பந்ததாரரின் போக்குவரத்து கட்டணப் பட்டியிலில் பிடித்தம் செய்யப்படும்.

10. ஒப்பந்ததாரர் இவ்வொன்றியத்திலிருந்து பொருள் அனுப்ப வேண்டி வாகனம் கோரிய 24 மணி நேரத்திற்குள் வாகனத்தை அனுப்பி வைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் நாளொன்றுக்கு ரூ.1000/— அபராதம் விதிக்கப்படும்.

ஒப்பந்ததாரர்கையொப்பம்

11. ஒப்பந்தம் திறக்கும் நாளிலிருந்து அதன் ஒப்பந்தம் முடியும் வரையில் அரசால் டீசல் விலை உயர்த்தப்பட்டாலோ அல்லது குறைக்கப்பட்டாலோ, கிலோமீட்டருக்கு விகிதாச்சார அடிப்படையில் விலை உயர்வோ அல்லது குறைவோ செய்யப்படும். (One Way Only) இத்தொகையினை ஒன்றிய நிர்வாககுழுவின் ஒப்புதல் பெற்ற பின் வழங்கப்படும்.

12. ஒப்பந்ததாரர் ஒன்றியம் கோரும் வாகனங்களை அனுப்ப வேண்டியது அவரது பொறுப்பாகும். தவறும்பட்சத்தில் ஒன்றியம் வேறு வகைகளில் வாகனத்தை ஏற்பாடு செய்து கொள்ளும். இதனால் ஏற்படும் அதிகப்படியான செலவினங்களை ஒப்பந்ததாரரின் வாடகைப் பட்டியல், காப்புத் தொகை மற்றும் இதர சொத்துகளிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

13. ஒப்பந்ததாரர் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு வாகனம் அனுப்பத் தவறினால், அவருடைய ஒப்பந்த ஆணை ரத்து செய்யப்படுவதுடன் அவரது காப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படுவதுடன் நாளொன்றுக்கு ரூ.1000/— அபராதம் விதிக்கப்படும்.

14. ஒப்பந்தம் கிடைக்கப்பெற்றவர்ரூ. 1,00,000/—ம் காப்புத் தொகையாக செலுத்த வேண்டும். காப்புத் தொகை ஒப்பந்தம் தேர்வு செய்யப்பட்ட ஒரு வார காலத்திற்குள் வரைவோலையாக (Demand Draft) செலுத்த வேண்டும். ஒப்பந்தகாலம் முடிவடைந்தவுடன் செலுத்தப்பட்ட காப்புத் தொகையில் 75% ஒப்பந்ததாரருக்கு திருப்பி வழங்கப்படும். மீதமுள்ள 25% காப்புத்தொகை ஒப்பந்தஆண்டுகளின் தணிக்கை முடிந்து, அதன் அறிக்கைகள் பெற்ற பின் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும்.

15. ஒப்பந்தம் கிடைத்த ஒப்பந்ததாரர் ஒன்றிய விதிகளின்படி ரூ.10/— (ரூபாய் பத்துமட்டும்) செலுத்தி ஒன்றியத்தில் இணை உறுப்பினராக பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்தொகை திருப்பி வழங்கப்பட மாட்டாது. இவ்வொன்றிய தேர்தலில் வாக்களிக்கவோ அல்லது ஒன்றிய லாபத்தில் பங்கு பெறவோ ஒப்பந்ததாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

ஒப்பந்ததாரர்கையொப்பம்

16. ஒப்பந்தப்புள்ளியானது தொழில்நுட்பபகுதி மற்றும் வணிகநுட்ப பகுதி என இரு பகுதிகளாக அடங்கும். ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பமிட்டு கவரின் மேல் தொழில்நுட்பபகுதி மற்றும் வணிகநுட்பபகுதி என எழுதி முழுமையாக தனித்தனி உறைகளிலிட்டு, மூடி முத்திரையிட்டு பின்பு அவைகளை பெரிய உறையிலிட்டு மூடி முத்திரையிட்டு அதன் மேல் பால் உபபொருட்கள் சென்னைக்கு எடுத்துச் செல்லுதல் எனபெயர் எழுதப்பட்டு சமா்ப்பிக்கப்பட வேண்டும்.

17. இந்தஒப்பந்தம், ஒன்றியத்தின் பால் உபபொருட்கள் எடுத்துச் செல்லுதல் வண்டிகளின் நிலைமை திருப்திகரமாக இல்லாது இருப்பின் அல்லது வண்டிகள் தேவையில்லை எனக் கருதும் போது ஒரு மாதகால நோட்டீஸ் கொடுத்து ரத்து செய்யப்படும்.

18. ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்ததாரா் ரூ.100/— மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தவிதிகளை ஏற்று ஒன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

19. ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரா், ஒரு வார காலத்திற்குள் ஒன்றியம் குறிப்பிடும் வங்கியில் கணக்கு ஆரம்பித்து, அதற்கான கணக்கு எண்ணை பொதுமேலாளா் அவா்களுக்கு தெரிவிக்க வேண்டும். 30 நாட்களுக்கு ஒருமுறை வழங்கும் வாடகைத் தொகை வங்கியில் இருசால் செய்யப்படும். வாடகைத் தொகையை வங்கி கணக்கின் மூலமே பெற்றுக் கொள்ள வேண்டும். வாடகைப் பட்டியல்களும் பிரதிமாதம் 5 — ம் தேதிக்குள் சமா்ப்பிக்க வேண்டும். காலதாமதமாக வரும் பட்டியல்களின் நிலுவைக்கு ஒன்றியம் பொறுப்பேற்காது.

20. ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டு அது முடிவுறும் காலமோ அல்லது மறு ஒப்பந்தம் விடப்பட்டு ஆணை பிறப்பிக்கும் காலத்திற்கு முன்போ, ஒப்பந்ததாரரே வண்டியை நிறுத்திக் கொண்டால் அவா் தனது காப்புத் தொகையை இழப்பதோடு ஒப்பந்ததாரா் எந்த“ஆவின் நிறுவனங்களிலும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள தகுதி அற்றவா்” என முடிவு செய்யப்படும்.

ஒப்பந்ததாரா்கையொப்பம்

21. வேலை நிறுத்தம், பந்த் மற்றும் இதர எதிர்பாராத சூழ்நிலைகளினால் போக்குவரத்து தடைபட்டால், பால் உபபொருட்கள் கொண்டு செல்ல மாற்று வழிகளைக் கடைப்பிடித்து தம்முடைய சொந்தப் பொறுப்பில் சென்னை இணைய அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் கடமையாகும்.

22. எதிர்பாராதவிதமாக வண்டி பழுதடைந்து விட்டால், மாற்று ஏற்பாடு செய்து உரிய காலத்தில் சென்னை இணைய அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் கடமையாகும். தவறும்பட்சத்தில் நாளொன்றுக்கு ரூ.1,000/— அபராதம் விதிக்கப்படும்.

23. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும்போது சுங்கச் சாவடி கட்டணம், ஏற்றுக்கூலி மற்றும் இறக்குக்கூலி ஆகியவற்றை சேர்த்து என குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளி அளிக்க வேண்டும் ஒப்பந்தப்புள்ளி குறிப்பிடும்போது 9.0 மெ.டன் முழு கொள்ளளவு கொண்ட வாகனத்திற்கு அனைத்து செலவுகளும் உட்பட மொத்த எடைக்கு வாடகை ரூ._______ எனவும் தனித்தனியே ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட வேண்டும்.

24. ஒப்பந்ததாரர் பால் உபபொருட்கள் கொண்டு செல்லும் போது வண்டி சம்பந்தமான டிரிப் சீட்டுகளையோ அல்லது அதற்கு சம்மந்தமான ஆதாரங்களையோ வண்டியில் வைத்திருக்க வேண்டியது அவரது முழுப் பொறுப்பாகும்.

25. வாகனம் முழுக் காப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். மோட்டார் வாகனச் சட்டப்படி ஒப்பந்தவாகனத்தின் சாலைவரி செலுத்துவது, ஒப்பந்த வண்டிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இன்சூரன்ஸ், வருங்கால வைப்புநிதி போன்றவற்றில் சட்டப்பூர்வமான விதிகளை கடைப்பிடித்து ஒப்பந்ததாரர்களே செலுத்தி, அதற்குரிய சலான் நகல்களை ஒன்றியத்திற்கு பிரதிமாதம் கொடுக்க வேண்டும். மேலும், பால் உபபொருட்கள் எடுத்துச் செல்லும்போது ஏற்படும் விபத்துகளுக்கும், அதனால் ஏற்படும் அனைத்துவிதமான இழப்புகளுக்கும் ஒப்பந்ததாரர்களே முழு பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக ஒன்றியம் எவ்வகையிலும் பொறுப்பேற்காது.

ஒப்பந்ததாரர்கையொப்பம்

26. காப்புத்தொகையை விட அதிகமான தொகை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டால், அவற்றை ஈடுகட்ட வேண்டியது ஒப்பந்ததாரரின் பொறுப்பு ஆகும். தவறும் பட்சத்தில் ஒப்பந்ததாரரின் இதர சொத்துக்களிலிருந்து வசூல் செய்ய ஒன்றியத்திற்கு உரிமைஉண்டு.

27. ஒன்றியம் அவ்வப்போது விதிக்கும் நிபந்தனைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் ஒப்பந்ததாரர் கட்டுபட்டவராவார். ஒன்றியத்திற்கும் ஒப்பந்ததாரருக்கும் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை துணைப்பதிவாளர் (பால்வளம்), ஈரோடு அவர்களின் வழக்குமன்றத்தின் மூலம் மட்டுமே தீர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

28. பால் உபபொருட்கள் எடுத்துச் செல்லும் வாகனத்திற்கு கைப்பேசி இணைப்புஅவசியம் வைத்திருக்க வேண்டும். ஒன்றிய அலுவலர்கள், முகவர்கள் அழைக்கும்பொழுது தவறாமல் பதிலளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ரூ.1000/— அபராதம் விதிக்கப்பட்டு வாடகை பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

29. வெண்ணெய் ஏற்றிசெல்லும் வாகனத்தின் குளிர் நிலைத்தன்மை(-18 ˚C) முதல் (-20C) — க்குள் இருக்க வேண்டும். வெண்ணெயின் தரம் குறையாமல் ஒன்றியம் தெரிவிக்கும் இடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும். தவறும்பட்சத்தில் ஒன்றியத்திற்கு ஏற்படும் இழப்பீட்டிற்க்கான மொத்த தொகை ஒப்பந்ததாரரிடம் அபராதமாகவசூலிக்கப்படும்.

30. ஒன்றியத்திலிருந்து அனுப்பப்படும் பட்டியல்கள் ,கடிதங்கள் போன்றவற்றை இணையத்தில் ஒப்படைப்பதும், அவர்கள் கொடுக்கும் பட்டியல்கள், ரசீதுகள் மற்றும் கடிதங்கள் போன்றவற்றை பெற்று ஒன்றியத்தில் சேர்ப்பதும் ஒப்பந்ததாரரின் பொறுப்பு ஆகும். இதனை சரிவர செய்யாவிடின் ரூ.1,000/— அபராதம் விதிக்கப்படும்.

31. மேற்கண்டவிதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட எல்லாவித நிகழ்ச்சிகளுக்கும் ஒன்றிய பொதுமேலாளர் அவர்களின் முடிவே இறுதியானதாகும். ஒப்பந்ததாரர் அவற்றிற்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டும்.

32. எந்தவொரு ஒப்பந்த நிபந்தனைகளையும் சேர்க்கவோ, நீக்கவோ, ரத்து செய்யவோ, மாற்றம் செய்யவோ பொதுமேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு

ஒப்பந்ததாரர்கையொப்பம்